# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்

## ஸ்வநிஷ்டாபிஞானம்
### குறிப்புகள்

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:
சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறை
ஸ்வநிஷ்டாபிஞானாதிகாரம் (குறிப்புகள்) - ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்

சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறை
ஸ்வநிஷ்டாபிஞானாதிகாரம் (குறிப்புகள்) - ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்

ஸ்வாமி தேசிகன் 1268ம் ஆண்டு புரட்டாசி மாதம் திருவோண நக்ஷத்திரத்தில் அவதரித்தவர். 101 திருநக்ஷத்திரங்கள் எழுந்தருளியிருந்து, ராமானுஜ ஸித்தாந்தத்தை புநஸ்தாபனம் செய்வித்தவர். இந்த வருடம் (விளம்பி வருஷம்) புரட்டாசி மாதம் திருவோண நக்ஷத்திரத்தில் (21.9.2018) ஸ்வாமி தேசிகனுடைய 750வது திருநக்ஷத்திரம் உலகெங்கும் கொண்டாடப் பட உள்ளது. இந்த பகவத் ராமானுஜ ஸித்தாந்தத்தை, அவர் நேரடிசிஷ்ய பரம்பரையடியாக (முறையே மடைப்பள்ளி ஆச்சான், கிடாம்பி ராமானுஜாச்சார், கிடாம்பி ரங்கராஜாச்சார், கிடாம்பி அப்புள்ளார் வழியாக) காலக்ஷேபம் பிழையற செய்து சாஸ்த்ர அர்த்தங்களைக் க்ரஹித்தவர் ஸ்வாமி தேசிகன். சாஸ்த்ரீயமான பல க்ரந்தங்களை அருளிய ஸ்வாமி தேசிகன், ஸர்வ ஜீவர்களின் நலனைக் கருதி, தன் முதிய திருநக்ஷத்திரத்தில், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம் என்ற 32 அதிகாரங்களைக் கொண்ட க்ரந்தத்தை அருளினார். இதில், தத்வம் (சேதன, அசேதன மற்றும் ஈஸ்வர தத்வங்கள்) , ஹிதம் (சரணாகதி) மற்றும் புருஷார்த்தத்தை ( சரணாகதியால் பெறக்கூடிய மோக்ஷ பலனை) ப்ராமணங்களுடன் (அதாவது பூர்வ ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள், வேத ஸம்ஹிதைகள், புராணங்கள், இதிஹாஸங்கள், வ்யாஸர் அருளிய ப்ருஹ்ம ஸூத்ரங்கள், பகவத் ஸ்ரீ ராமானுஜர் அருளிய ஸ்ரீபாஷ்யம் மற்றும் ஆழ்வார் பாசுரங்களைக் கொண்டு) பகவத் ஸ்ரீ ராமானுஜர் திருவுள்ளபடி விவரமாக அருளிச்செய்தார்.

அந்த க்ரந்தத்தில், மோக்ஷ பலனுக்காக சரணாகதியை ஆசார்யன் மூலமாக அனுஷ்டித்த ஒரு சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறையை 14வது அதிகாரத்தில் (ஸ்வ நிஷ்டா அபிஞானம் என்கிற அதிகாரத்தில்) விவரிக்கிறார். அதில் ஒரு சரணாகதனுக்கு இருக்க வேண்டிய மூன்று விதமான விஷயங்களின் (அதாவது, ஸ்வரூப நிஷ்டை, உபாய நிஷ்டை மற்றும் புருஷார்த்த நிஷ்டை) தெளிவை எப்படி தாமே பரிக்ஷித்து அறிந்து கொள்வது என்பதை விளக்குகிறார்.

ஸ்வரூப நிஷ்டையாவது உடல் சம்பந்தமில்லாத ஆத்மாவைப் பற்றின தெளிவு. பிறராலே நமக்கு ஒரு அவமானம் ஏற்படும் போது, அவர்கள் பால் நமது கண்ணோட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை விளக்குகிறார். அதன் வாயிலாக இந்த விஷயத்தில் நமக்கு தெளிவு உள்ளது எனவும் உணரலாம்.

1. அந்த அவமான சொற்களால் சொல்லுகிற தோஷங்களெல்லாம் தன் ஆத்மாவைப் பற்றியது அல்ல என்றும் ஒரு காலத்தில் நம்முடன் சேர்ந்து மற்றொரு காலத்தில் நம்மிடமிருந்து பிரிந்து செல்லும் உடலைப் பற்றியது எனவும் புரிந்து கொண்டு, விஷாதாதிகள (கோபம், சோகம் போன்றவை) அற்று இருக்கையும்,

2. ‘க்ஷிப்யமினம்ச யத் பாபம் ஷபந்தம் அதி கச்சதி’ என்கிற படியே இவ்வமானத்தால் நம் பாபத்தை வாங்கிச் செல்லும் அந்த மதிகேடர் பக்கலிலே கரை புரண்ட க்ருபையும்,

3. ‘அமர்யாத: க்ஷூத்ர: சலமதி அஸூயா ப்ரஸவபு:’ என்கிற ஆசார்ய ஸ்ரீஸூக்திகளாலும், ‘வாடினேன் வாடி’ என்கிற ஆழ்வார் பாசுரங்களாலும் நாம் எப்போதும் நினைவில் கொள்ளத் தகுந்த நமது

தோஷங்களை நமக்கு மறவாத படி செய்தமைக்காக ‘அவர்கள் நமக்கு உபகாரம் பண்ணினார்கள்’ என்கிற புத்தியும்,

4. ‘இன்புறும் இவ்விளையாட்டுடையானான’ ஸர்வேஸ்வரனால் (நமது பூர்வ ஜன்ம கர்மாவின் அடிப்படையைக் காரணமாகக் கொண்டு) கொடுக்கப்பட்டது இந்த அவமானம் என உணர்ந்து அவர்கள் பக்கலிலே மாறுதல் அற்ற எண்ணமும்,

5. இந்த அவமானத்தாலே நமது பூர்வ ஜன்ம ப்ராரப்த பாபம் கழிகிறது என்று சந்தோஷமும் அடைந்தால்,

ஸ்வரூப நிஷ்டை (நாம் எத்தகையவன் என்ற தெளிவு) நமக்கு உண்டு என அறியலாம்.

அதாவது , ‘கர்மத்தின் காரணமாக நாம் பெற்றுள்ள உடல் வேறு, ஆத்மா வேறு என்ற எண்ணமும்’, ‘நாம் ஸர்வேஸவரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு அடிமைப் பட்டவர்கள் என்ற எண்ணமும்’, ‘நாம் ஸ்வதந்த்ரர்கள் அல்ல என்ற எண்ணமும்’, ‘அனைத்து நடப்பும் நமக்கு பூர்வ கர்ம காரணமாக ஏற்படுகிறது என்ற எண்ணமும்’, ‘ஸர்வமும் ஸர்வேஸ்வரன் ஸங்கல்பத்தால் மட்டுமே நடக்கிறது என்ற எண்ணமும்’ நமக்கு உண்டு என அறியலாம். அதனால் அனைவர் விஷ ய த்திலு ம் கசப்பு உண ர்வு அ ற்ற எ ண் ண ம் ந மக்கு ஏ ற் ப டும்.

ஒரு ச ர ண ா க த ன் இங்குள் ள க ா லம் இருக் க வே ண் டி ய மு றை யை 14 வது அ தி க ா ர த் தி ல்( ஸ் வ நி ஷ்டா அபி ஞ ா ன ா ம் எ ன் கிற அதி க ா ர த் தி ல்) வி வ ரி க்கிறா ர் . அதி ல்ஒரு ச ர ணா க த னு க்கு இருக்க வே ண்டி ய மூன் று வித ம ா ன விஷ ய ங்க ளி ல்உ பா ய நி ஷ் டை யி ன் தெளி வை எ ப் ப டி த ா மே ப ரி க்ஷி த்து அ றி ந்து கொள்வது எ ன் ப தைவி ள க்குகி ற ா ர் . உபா ய நி ஷ்டைய ாவது, மோ க்ஷ ப லனு க்கா க ஒரு ஸதா சா ர்ய ன் மூலமா க சா ஸ்த்ர வி தி ப் ப டி அத ன் அங்க ங் க ளோ டுதா ம் அனுஷ் டி த்த சர ணா க தி அனுஷ் டா ன த்தை ப் ப ற்றின தெளிவு.

1. ஸ ர் வே ஸ் வ ர ன ா ன ஸ்ரீ ம ந் ந ா ர ா ய ண னே ஒரு ச ர ண ா க த னு க்கு அ னை த் து வி ஷ ய ங் களு க் க ா ன ர க்ஷ க ன் எ ன் கி ற நி லை யா ன எ ண் ண த் தோ டு, அ வ னை த் த வி ர தா னோ ம ற் ற வ ரோ த ன க்கு ர க்ஷ க ன் ஆ க ம ா ட் டா ர் க ள்எ ன் கி ற பு த் தி யு ம்

2. ம ர ண ம் வ ரை உ ள்ள அ னை த் து ப ய த்துக் க ா ன கா ர ண ங் க ளை ச ந்தி க் க நே ர் ந்த ாலு ம்,
‘ப்ராயேண அக்ருதக்ருத்யத்வாத் ம்ருத்யோ: உத் விஜதே ஜநா: க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரயம் இவ அதிதிம்’ ( அதாவது, சாஸ்த்ரத்தில்விதித்த மோக்ஷத்துக்கு வேண்டிய ச ர ணா க தி அனு ஷ்டா ன த்தை முறை ப் ப டி செ ய் ய ா தவ ர் கள், ம ர ண த்தை க் கண்டுஅ ஞ்சுவ ா ர் கள். மற்றவர், மரணத்தை ஒரு ப்ரியமான விருந்தாளியைப்போல்எதிர் பார்த்து இருப்பர் ) எ ன் கி றபடி யே இந்த ச ரீ ர ம் து ற ந்த பிறகு, ந ா ம் எ ன் ன பா டுப டுவே ா மே ா எ ன் கி ற க வ லைஅற்று , அ பி ம த ஆ ஸ க்தி யா லே( விரும் பி ய ப லனை சீ க் கி ர ம் அ டை வோ ம் எ ன் ற எ ண் ண த்தா லே) ச ந்தோஷ ம ாய் இருக்கை யு ம்

3. 'கஜம் வா வீக்ஷ்ய ஸிம்ஹம் வா வ்யாக்ரம் வாபி வரானன. ந ஆஹாரயதி ஸந்த்ராஸம் பாஹூ ராமஸ்ய ஸந்த்ரிதா:' ( அதாவது, ஸ்ரீராமனைப் பற்றி இருப்பதால், காட்டில் சிங்கம், புலி, யானை போன்ற மிருகங்களைக்கண்டு ஸீதை அஞ்சவில்லை … என்று அவர்களை காட்டில் விட்டுவிட்டு வந்த ஸுமந்தரர் தசரதனுக்கு உரைக்கிறார் ) என்றும், 'அஸந்தேஷாது ராமஸ்ய தபஸ்ச அனுபாலனாத். ந த்வா குர்மி தஸக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹ தேஜஸா' ( அதாவது, லங்கையில் ஹநுமானின் வாலில் பட்ட தீயை குளிர்ந்து போகட்டும் என அனுக்ரஹித்த ஸீதையால் ராவணனை சாம்பலாகட்டும் எனப் பண்ணுவது பெரிய விஷயமல்ல. ஆனால் ஸ்ரீராமன் அவ்வாறு நியமிக்காத்தால் அதை தான் செய்யவில்லை… என்று ஸீதாப் பிராட்டி உரைக்கிறாள் ) என்றும், 'ஷரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்கா பரபலார்தன: மா நயேத்யதி காகுஸ்த தத் தஸ்ய ஸத்ருஷம் பவேத்' ( சத்ருக்களை அழித்து தன்னை மீட்டு செல்வதனாலேயே ஸ்ரீராமனுக்கு பெருமை ஏற்படும் … என்று ஸீதாப் பிராட்டி உரைக்கிறாள் ) என்றும் ஸீதாப் பிராட்டி நடத்திக் காட்டின ரக்ஷகாவஷ்டம்பத்தில், அதாவது ஸர்வ ரக்ஷகனைப் பற்றியதால் ஏற்படும் கவலை அற்ற தன்மை, கொண்டு கவலை அற்று இருக்கையும்

4. நாம் சரணாகதி பண்ணின விஷயத்தில், எந்த விதமான வேறு ஒரு முயற்சியும் கூடாது என்று தெளிந்து இருக்கையும்

5. அதில், இஷ்டப் ப்ராப்தியும் (இஷ்டமான அனுகூலத்தை அடைவதும்) அநிஷ்ட நிவ்ருத்தியும் (இஷ்டமில்லாத அனுகூலம் அற்றதை அடையாமல் இருப்பதும்) ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் திரு உள்ளப்படியே நடக்கும் என்று நிம்மதியாக இருக்கையும் ஏற்பட்டால்

உபாய நிஷ்டையை (நாம் ஸதாசார்யன் மூலமாக அனுஷ்டித்த சரணாகதியின் மஹிமையை) நாம் நன்கு உணர்ந்து கொண்டு இருக்கிறோம் என அறியலாம்.

புருஷார்த்த நிஷ்டையாவது, ஒரு ஸதாசார்யன் மூலமாக சாஸ்த்ர விதிப் படி அதன் அ ங க ங க ளோ டு நா ம் மோ க்ஷ ப ல னு க் கா க அ னு ஷ் டி த் த ச ர ண ா க தி யா ல் வ ர ப் பே ாகும் மி க உ ய ர் ந்த, து க்க கல ப் பு அற்ற அ ள வி ட மி டி யாத ப டி உ ள்ள ஸு க ரூ ப மா ன ப லனி ல் தெளி வு. அந்த எ ண் ண த் தை எ ப் ப டி தா மே ப ரி க்ஷித்து அ றி ந் து கொ ள் வ து எ ன் ப தை வி ள க்குகி ற ா ர் ஸ் வ ா மி தேசிகன்.

1. 'உத்பத்தி ஸ்திதி நாஷாணாம் ஸ்திதௌ சிந்தா குதஸ்தவ. யதோத்பத்தி யதா நாஷாணாம் ஸ்திதி தத்வத் பவிஷெயதி' (அதாவது, பிறப்பு, இருப்பு, இறப்பு என்ற மூன்றில் பிறப்பும் இறப்பும் நம் ஆதிக்கத்தில் இல்லை என்று தெரிந்தும் இருப்பை நம் ஆதிக்கத்தில் இருப்பதாக நினைத்து ஏன் துயரப் பட வேண்டும்?) என்றும், 'அசேஷ்டமானம் ஆஸீனம் ஸ்ரீ: கஸ்சித் உபதிஷ்டதி. கர்மி கர்மானு ஸ்ருத்யான்யோ ந ப்ராஷ்யமபிகச்சதி' (அதாவது, உழைப்பு குறைவாக உள்ளவனிடம் செல்வத்தையும், அதிக உழைப்பு உள்ளவனிடம் வருமையையும் நாம் காண்கிறோம்) என்று, ஈஸ்வரனால் அளிக்கப் படுகிற கர்ம பலனில் வருத்தம் அற்று இருக்கையும்

2. 'உத்பதன்னபி சாகாஷம் விஷன்னபி ரஸாதளம். அடன்னபி மஹீம் க்ருத்ஸ்னா நா தத்த உபதிஷ்டதே' (அதாவது, ஆகாசத்தில் பறந்தாலும், பூமிக்குள் சென்றாலும், உலகை சுற்றி

வந்தாலும் பலன்கள் நம்முடைய கர்மாவின் அடிப்படையில் தான் கிடைக்கும்) என்றும், 'யத் கிஞ்சித் வர்ததே லோகே ஸர்வம் தன்மத் விசேஷ்டிதம். அந்யோ அந்ய சிந்தயதி ஸ்வச்சந்தம் விததாம்யஹம்' (அதாவது, உலகில் நடக்கும் அனைத்தும் ஸர்வேஸ்வரன் இஷ்டப்படியே தான் ஆகும் ) என்றும் ஈஸ்வரன் ஸங்கல்பம் அன்றி ஒன்றும் நடவாது என்று மனத்தில் தெளிந்து இருக்கையும்

3. 'அப்ரயத்ன ஆகதா: ஸேவ்யா க்ருஹஸ்தைர்விஷயா: ஸதா. ப்ரயத்னேனாபி கர்தவ்ய: ஸ்வ தர்ம இதி மே மதி:' (அதாவது, ஒரு க்ருஹஸ்தன் பெரிய முயற்சி இல்லாமல் வரும் பலன்களை அனுபவிக்க தக்கவன். ஆனால் நமக்கு விதிக்கப் பட்ட கர்மங்களை முயற்சி செய்தாவது நிச்சயமாக அனுஷ்டிக்க வேண்டும்) என்றும், 'ந ஆஹாரம் சிந்தயேத் ப்ராக்ஞ: தர்ம ஏவ அனுசிந்தயேத். ஆஹாரோஹி மனுஷ்யாணாம் ஜன்மனா ஸஹ ஜாயதே' (அதாவது, புத்தி உள்ளவன் ஆகாரத்தை நினைக்க மாட்டான். தனக்கு ஏற்ற தர்மத்தையே பெரிதாக நினைத்திருப்பான் ) என்றும் சாஸ்த்ர முரண்பாடு இல்லாத விஷயத்தில் தான் ஒரு செயல் செய்யாதிருக்க பகவத் ஸங்கல்பத்தாலே பலன் தாமே வரக் கண்டு ப்ராரப்த கர்ம பலன் தீருகிறது என்று விலக்காதே அனுபவிக்கையும்

4. இப்படி கர்ம விசேஷ அதீனமாக வருகிற உலக ரீதியாக வரும் நல்லது மற்றும் தீயதுகளில் ஸந்தோஷ சோகங்கள் அற்று ஸ்வரூப அனுரூபமான பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்யத்திலே ருசி குறைவில்லாமல் இருக்கையும்

5. 'தனம் மதீயம் தவ பாத பங்கஜம் கதா நு ஸாக்ஷாத் கரவாணி சக்ஷுஷா' என்கிற ஆளவந்தார் ஸ்ரீஸூக்திகளிலும் 'கதாஹம் பகவந்தம் ஸாக்ஷாத் கரவாணி சக்ஷுஷா' என்கிற வைகுண்ட கத்யாதிகளிலும் உரைக்கிற உயர்ந்த பலனை, எப்போது அடையப் போகிறோம் என்று எதிர் நோக்கி, கல்யாணத்துக்கு நாள் குறித்த ப்ருஹ்மச்சாரி கல்யாண நாளை எதிர்பார்ப்பது போல், அந்த பலனில் ஆசையுடன் இருந்தால்

நாம் ஸதாசார்யன் மூலமாக அனுஷ்டித்த சரணாகதியினால் வர இருக்கும் நற் பலனை, கடலை பார்த்திராத ஒருவனுக்கு கடற்கரையில் நின்று, (அந்த கடலின் நீளம், ஆழம், அதில் வசிக்கும் உயிரினங்களை அறியாது), கடலை கையிட்டு காட்டுவது போலே அளவிடமுடியாத பரம புருஷார்தத்தில் (உயர்ந்த மோக்ஷ பலனில்) தெளிவு நமக்கு உண்டென்று அறியலாம்.

ஸ்வநிஷ்டாபிஞான அதிகாரத்தின் முடிவுரை:

ஒரு சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறையை 14 வது அதிகாரத்தில் (ஸ்வநிஷ்டாபிஞானாம் என்கிற அதிகாரத்தில்) விவரித்து அருளினார் ஸ்வாமி தேசிகன். அதில் ஒரு சரணாகதனுக்கு இருக்க வேண்டிய மூன்று விதமான விஷயங்களின் தெளிவை (அதாவது ஸ்வரூப நிஷ்டை, உபாய நிஷ்டை மற்றும் புருஷார்த்த நிஷ்டையை) எப்படி தாமே பரிக்ஷித்து அறிந்து கொள்வது என்பதை விளக்கிஇருக்கிறார். நாம் அதை கடந்த மூன்று தினங்களாக கண்டு அனுபவித்தோம்.

ஸ்வரூப நிஷ்டை : உடல் சம்பந்தமில்லாத ஆத்மாவைப் பற்றின தெளிவு

உபாய நிஷ்டை : மோக்ஷ பலனுக்காக சாஸ்த்ர விதிப் படி அதன் அங்கங்களோடு நாம் அனுஷ்டித்த சரணாகதி பற்றின தெளிவு

புருஷார்த்த நிஷ்டை : சரணாகதியால் வரப் போகும் மிக உயர்ந்த, துக்க கலப்பு அற்ற ஸுக ரூபமான பலனைப் பற்றின தெளிவு

மோக்ஷ பலனுக்காக அனுஷ்டிக்க வேண்டிய சரணாகதி அனுஷ்டானத்தை செய்து முடித்த ஒருவனுக்கு , மூல மந்திரம், த்வயம், சரமஸ்லோகம் என்கிற மூன்று முக்கிய மந்திரங்களின் வாயிலாக இந்த நிஷ்டைகள் விவரித்து காட்டப் பட்டிருக்கின்றன.

1. முக்கிய மந்த்ரங்களைக் கொண்டு, 'அஹம் ஆத்மா ந தேஹோஸ்மி விஷ்ணு சேஷோ அபரிக்ரஹ: தமேவ சரணம் ப்ராப்த: தத் கைங்கர்ய சிகீர்ஷயா' (அதாவது, 'நான்' என்கிற சொல் ஆத்மாவை குறிக்கும்; எனது சரீரத்தை குறிக்காது; ஸர்வேஸ்வரனுக்கு நான் அடிமைப் பட்டவன்; எனக்கு அடிமைப்பட்டது என்பது எதுவும் கிடையாது. நமக்கு அடிமைப் பட்டதாக இங்கு தோன்றும் அனைத்தும் சரீர சம்பந்தத்தினால். ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை சரண் அடைந்திருக்கிறேன்; அவனுக்கு அடிமைத் தொழில் செய்வதற்காக) என்கிறபடியே ஸ்வரூப, உபாய, புருஷார்த்த நிஷ்டைகளை நாம் அறியலாம்.

2. இந்த நிஷ்டைகளைக் கொண்ட இவ்வதிகாரிக்கு, 'நைஷா பஷ்யதி ராக்ஷஸ்யோ நேமாந் புஷ்ப பலத்ருமான். ஏகஸ்த ஹ்ருதயா நூநம் ராமமேவ அனுபஷ்யதி' (அதாவது, அசோகவனத்தில் இருந்த ஸீதை அங்குள்ள ராக்ஷஸிகளைக் கண்டு கலங்கவில்லை, பூக்கள் கனிகள் நிறைந்த மரங்களைக் கண்டு சந்தோஷப்படவில்லை, ஸ்ரீ ராமன் வரவையே எதிர் நோக்கி இருக்கிறாள் - இவ்வாறு தூது சென்ற ஹனுமான் ஸ்ரீராமனுக்கு எடுத்துரைக்கிறான்) என்கிறபடியே இப்ராக்ருத லோகத்தில் பல விதமான அல்ப ஸுகங்களோடும் மற்றும் இன்னல்களோடும் கூடி இருந்து போகும் போது, பகவத், பாகவத ஆசார்ய கைங்கர்யம் நீங்கலாக எந்த ஒரு சந்தோஷ காரணங்களிலும் கண்ணோட்டம் உண்டாகாது; பாகவத அபசாரம் நீங்கலாக எந்த ஒரு பயம் காரணங்களிலும் கண்ணோட்டம் உண்டாகாது. இது இங்குள்ள காலம் வரையில் இருக்கிற சரணாகத இலக்கணம்.

3. 'முக்கிய மந்திரம் காட்டிய மூன்றின் நிலை உடையார். தக்கவை அன்றி தகாதவை ஒன்றும் தமக்கு இசையார். இக்கருமங்கள் எமக்கு உள என்னும் இலக்கணத்தால் மிக்க உணர்த்திய மேதினி மேவிய விண்ணவரே'. அதாவது, மூன்று முக்கிய மந்திரங்களின் வாயிலாக தெளிவு படுத்தப் பட்ட இந்த நிஷ்டைகளில் நிலையாக உள்ளவர்கள், தன் நிஷ்டைகளுக்கு தகுந்த வற்றை செய்து கொண்டும், தகாதவற்றை செய்யாமல் இருந்து கொண்டும் இருக்கும் லக்ஷணத்தால் அவர்கள் இங்கிருக்கும் காலத்திலேயே முக்தி அடைந்தவர் போல் இருக்கின்றனர்.



ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: அஸ்மத் ஸர்வ குருப்யோ நம: